RNI (PRGI) No.TNTAM/25/A0208

# உள்ளாட்சி அரசு

தினசரி தமிழ் காலை நாளிதழ்

"இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு" திருவள்ளுவர்

youtube.com/@ullatchiarasu facebook.com/ullatchi.arasu.5

* COIMBATORE புதன் அக்டோபர் 22 * 2025 * மலர் -1 * இதழ்-142 * VOL-1 * ISSUE-142 விலை ரூ.3 * பக்கம் -4



கர்நாடக மாநிலம் உத்தரகன்னடா மாவட்டத்தில் உள்ள கார்வார் கடற்படை தளத்தில் ஐ.என்.எஸ். விக்ராந்த் போர்க்கப்பலில் பிரதமர் மோடி கடற்படையினருடன் சேர்ந்து தீபாவளியை கோலாகலமாக கொண்டாடினார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் காவல்துறை தலைமை அலுவலக வளாகத்தில் காவலர் வீரவணக்க நாளையொட்டி நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழ்நாடு காவல்துறையில் பணியின் போது வீரமரணமடைந்த மற்றும் பணியின்போது விபத்துகளில் மரணம் அடைந்த காவலர்கள் என மொத்தம் 6 காவலர்களின் குடும்பத்தினர்களுக்கு தமிழ்நாடு அரசின் சம்பளத் தொகுப்பு (Salary Package) திட்டத்தில் State Bank of India மற்றும் Union Bank of India ஆகிய வங்கிகளின் மூலம் தனிநபர் விபத்து காப்பீட்டுத் தொகை மற்றும் தமிழ்நாடு அரசின் கருணைத் தொகை, என மொத்தம் 5 கோடியே 70 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், உள்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ் குமார், காவல்துறை தலைமை இயக்குநர்/படைத்தலைவர் ஜி. வெங்கடராமன், சென்னை பெருநகர காவல் ஆணையர் ஆ. அருண், காவல்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### இந்தப் பருவ மழையின் முதலாவது புயல் சின்னம்:

# வங்கக் கடலில் காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி உருவானது!

## தமிழகத்தை நோக்கி நகரும் என்பதால் மழை அதிகரிக்கும்!!



சென்னை, அக்.22

தமிழ்நாட்டில் தென் மேற்கு பருவக்காற்றின் ஆதிக்கம் முடிந்த பிறகு வடகிழக்கு பருவமழை தொடங்கியுள்ளது. பொதுவாக இந்தப் பருவமழை அக்டோபர் 20–க்குப் பிறகு தொடங்கும். ஆனால் இந்த ஆண்டு அக்டோபர் 16–ஆம் தேதியே தொடங்கி விட்டது.

இந்தப் பருவ மழை டிசம்பர் மத்தி வரை நீடிக்கும். வட கடலோர மாவட்டங்களில் மிக அதிகமாகவும், தென் மாவட்டங்களில் சற்று குறைவாகவும் இருக்கும்.

சென்னை உள்ளிட்ட வட மாவட்டங்களைப் பொறுத்தவரை 80 செ.மீ. வரை பெய்யும். தென் மாவட்டங்களிலும், உள் மாவட்டங்களிலும் குறைவாக இருக்கும். ஆகவே சராசரி மழை அளவு 41 செ.மீ. ஆகும்.

ஆனால் இந்த ஆண்டு வழக்கத்தை விட சற்று கூடுதலாக பெய்யும் என வானிலை நிபுணர்கள் முன்னரே கணித்திருந்தனர். அதற்கேற்ப மழையும் முன்கூட்டியே தொடங்கி விட்டது.

கடந்த ஒரு வாரத்துக்கும் மேலாகவே தமிழ்நாட்டில் பல பகுதிகளில் பரவலாக மழை பெய்து வருகிறது. குறிப்பாக மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதிகளில் மிக பலத்த மழை பெய்தது.

இதனால் இந்த மலையில் உள்ள அருவிகளிலும், நீர்நிலைகளிலும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. ஏற்கனவே தென்மேற்குப் பருவமழையால் அணைகளில் ஓரளவு தண்ணீர் நிரம்பியிருந்தது. இப்போது பல அணைகள் முழுவதுமாக நிரம்பி விட்டன. அதனால் உபரி நீர் திறந்து விடப்படுகிறது.

இப்படிப்பட்ட நிலையில் அரபிக் கடலில் கடந்த வாரமே புயல் சின்னம் தோன்றியது. பொதுவாக பூமத்திய ரேகைக்கு வடக்கே தோன்றும் புயல்கள் யாவும் வடமேற்கு திசையில் தான் நகரும்.

அந்த வகையில் அரபிக்கடலில் தோன்றும் புயல்கள் யாவும் அரபு நாடுகளை நோக்கியே செல்லும். தமிழ்நாட்டுக்கு நேரடி தாக்கம் இருக்காது. வங்கக்கடலில் உருவாகும் புயல் சின்னங்களால்தான் தமிழ்நாட்டுக்கு அதிக மழை கிடைக்கும். அந்த வகையில் இந்த ஆண்டு பருவமழை தொடங்கிய பின்னர் முதலாவது குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை இன்று உருவாகி உள்ளது.

வங்கக்கடலில் தென் மேற்குப் பகுதியில் இந்த தாழ்வுப் பகுதி தோன்றியுள்ளது. இது மேற்கு – வட மேற்கு திசையில் தமிழகத்தை நோக்கி நகரும் என எதிர்பார்க்கப்படுகிறது. அடுத்த 36 மணி நேரத்தில் தெற்கு மற்றும் மத்திய மேற்கு வங்கக்கடலில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுவடையும். இதன் காரணமாக தமிழ்நாட்டின் கடலோர மாவட்டங்களில் மழை தொடரும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் தென் மாவட்டங்களிலும், டெல்டா மாவட்டங்களிலும் கனமழை பெய்யும்.

இன்றைய தினத்தை பொறுத்தவரை கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி உள்ளிட்ட தென் மாவட்டங்களிலும், சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், காஞ்சிபுரம், அரியலூர், பெரம்பலூர், விழுப்புரம், மதுரை, விருதுநகர், சிவகங்கை, தேனி, திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் பலத்த மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

சென்னையைப் பொருத்தவரை நேற்று காலையில் கிழக்குக் கடற்கரைச் சாலைப் பகுதியில் கன மழை கொட்டியது. மற்ற பகுதிகளில் விட்டுவிட்டு மழை பெய்தது.

புயல் சின்னத்தின் காரணமாக 24–ஆம் தேதி வரை தமிழ்நாட்டிலும், அண்டை மாநிலங்களான தென் ஆந்திரம், கர்நாடகம் மற்றும் கேரளத்திலும் மிக மிக பலத்த மழை பெய்யும் என்றும் அகில இந்திய வானிலை இலாகா தெரிவித்துள்ளது.



# வாணியம்பாடி அருகே ஆந்திரா அரசு கட்டியுள்ள தடுப்பணை நிரம்பி பாலாற்றில் உபரி நீர்!

வாணியம்பாடி, அக்.22

கடந்த சில தினங்களாக கர்நாடகா மாநிலத்தில் பெய்து வரும் தொடர் மழை காரணமாக, கோலார் மாவட்டம் பேத்தமங்கலம் பகுதி, பாலாற்றின் குறுக்கே உள்ள ஏரி நிரம்பி அதன் உபரி நீர் பாலாற்றில் வெளியேறி வருகிறது.

இதன் காரணமாக ஆந்திரா மாநிலத்தில் ஆந்திரா அரசால் கட்டியுள்ள அனைத்து தடுப்பணைகள் நிரம்பி பெரும்பள்ளம் என்ற இடத்தில் உள்ள 22 அடி உயரம் கொண்ட தடுப்பணையும் நிரம்பி அதன் உபரி நீர் தமிழக பாலாற்றில் வெளியேறி வருகிறது.

தமிழக பாலாற்றில் நீர் வருவதை பகுதி மக்கள் சிறப்பு பூஜைகள் செய்து வரவேற்றனர். மேலும் தமிழகத்தில் ஓடும் பாலாறு புல்லூர், திம்மாம்பேட்டை, ஆவாரங்குப்பம், இராமநாயக்கன்பேட்டை, அம்பலூர், கொடையாஞ்சி, வாணியம்பாடி வழியாக சுமார் 222 கிலோமீட்டர் பயணம் செய்து இறுதியாக வங்கக் கடலில் கலக்கின்றது.

வெள்ளப்பெருக்கு காரணமாக ஆற்றில் யாரும் இறங்குவோ, குளிக்கோ கூடாது எனவும், கர்நாடகா மற்றும் ஆந்திரா மாநிலங்களில் அதிக அளவு மழை பெய்தால் பாலாற்றில் பெரும் வெள்ளம் ஏற்பட வாய்ப்பாக உள்ளது எனவும்

ஆகையால், கரையோரம் வசிக்கும் மக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று மாவட்ட நிர்வாகம் ஒலிபெருக்கி மூலமாக எச்சரிக்கை விடுத்து வருகின்றனர்.

### 20 –க்கும் மேற்பட்ட குழந்தைகள் பலி எதிரொலி:

# இருமல் மருந்துகளுக்கு 'கியூஆர்' குறியீடு அறிமுகம்!

## மத்திய அரசு நடவடிக்கை!!

புதுடெல்லி, அக்.22

மத்திய பிரதேசத்தில், கலப்படமான 'கோல்ட்ரிப் என்ற இருமல் மருந்தை உட்கொண்டதால் 20 குழந்தைகள் பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும், ஐந்து குழந்தைகள் சிறுநீரக செயலிழப்பு காரணமாக தீவிர சிகிச்சையில் உள்ளனர். இந்த மருந்தை தயாரித்தது தமிழ்நாட்டின் காஞ்சிபுரத்தை சேர்ந்த பார்மசூட்டிகல்ஸ் நிறுவனத்துக்கு தடை விதிக்கப்பட்டு சீல் வைக்கப்பட்டது. அதன் உரிமையாளர் கைது செய்யப்பட்டார். இதைத் தொடர்ந்து மத்திய சுகாதார அமைச்சகம் மருந்து விதிகள் சட்டத்தில் திருத்தங்களை அறிவித்துள்ளது. இந்த நடவடிக்கை போலி மற்றும் தரமற்ற மருந்துகளுக்கு எதிரான போராட்டத்தை பெரிதும் வலுப்படு த்தும் என்று அகில இந்திய வேதியியலாளர்கள் மற்றும் மருந்து விற்பனையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. இதற்கிடையே தடுப்பூசிகள், நுண்ணுயிர் எதிர்ப்பிகள், போதைப்பொருள் மற்றும் சைக்கோட்ரோபிக் மருந்துகள் மற்றும் புற்றுநோய் எதிர்ப்பு மருந்துகளுக்கு பார்கோடிங் மற்றும் கியூஆர் குறியீடு முறையை கட்டாயமாக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. இது தொடர்பாக மத்திய சுகாதார அமைச்சகம் வெளியிட்ட அறிவிப்பின்படி, மருந்துகள் விதிகள், 1945 இன் கீழ் சில விதிகள் திருத்தப்படும். மருந்துகள் தொழில்நுட்ப ஆலோசனைக் குழுவுடன் கலந்தாலோசித்த பிறகு திருத்தங்கள் முன்மொ ழியப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது இந்த நிலையில் இது குறித்து அந்த சங்கத்தின் தலைவர் ஜே.எஸ். ஷிண்டே மற்றும் பொதுச் செயலாளர் ராஜீவ் சிங்கால் ஆகியோர் ஒரு அறிக்கையில் கூறியுள்ளதாவது, மத்திய அரசின் இந்த நடவடிக்கை போலி மற்றும் தரமற்ற மருந்துகளுக்கு எதிரான போராட்டத்தை பெரிதும் வலுப்படுத்தும். இவ்வாறு அவர்கள் கூறினர் .



மேற்கு தொடர்ச்சி மலையில் தொடர்ந்து கன மழை பெய்து வருவதால் மணிமுத்தாறு அருவியில் அதிக அளவில் தண்ணீர் கொட்டுகிறது. இதனால் 7–வது நாளாக சுற்றுலா பயணிகள் குறிக்க வனத்துறை தடை விதித்துள்ளது.

# கள்ளக்காதலன் கத்தியால் குத்தியதில் பெண், கணவர் சாவு!

புதுடெல்லி, அக். 22

டெல்லியில் காதல் விவகாரத்தில் கள்ளக் காதலன் கத்தியால் குத்தியதில் பெண்ணும் அவரின் கணவரும் இறந்தனர். மத்திய டெல்லியின் ராம் நகர் பகுதியைச் சேர்ந்தவர் ஆகாஷ் (23) . இவர் ஆட்டோ ஓட்டுநராக உள்ளார். இவரின் மனைவி ஷாலினி (22).2 குழந்தைகள் உள்ள நிலையில் ஷாலினிக்கு ஆகாஷின் நண்பரான ஆஷு என்கிற ஷைலேந்திராவுக்கும் (34)இடையே கள்ள உறவு இருந்து வந்தது. அவர் ஆஷுவுடன் பழகி சிறிது காலம் அவருடன் சேர்ந்து வாழ்ந்துள்ளார். பின்னர் சமரசம் ஏற்பட்டு இருவரும் மீண்டும் ஒன்றாக வாழத் தொடங்கியுள்ளனர். இந்தச் சூழலில் ஷாலினி கருவுற்றபோது, அந்தக் குழந்தைக்குத் தான் தந்தை என்று ஆஷு உரிமை கொண்டாடி பிரச்சினை செய்துள்ளார். ஆனால், தனது கருவில் இருப்பது ஆகாஷின் குழந்தை என்று ஷாலினி கூறினார் .இதனால் ஷாலினி ஆஷுவுடன் பேச்சை நிறுத்திவிட்டார். இதற்கிடையே சம்பவத்தன்று இரவு, குதுப் சாலையில் உள்ள ஷாலினியின் தாயாரைச் சந்தித்துவிட்டு, ஆகாஷும் ஷாலினியும் ஆட்டோவில் வீடு திரும்பிக் கொண்டிருந்தனர். அப்போது அவர்களை திடீரென வழிமறித்த ஆஷு, ஆகாஷை கத்தியால் தாக்க முயற்சித்துள்ளார். பின்னர் ஷாலினியை சரமாரியாகக் கத்தியால் குத்தியுள்ளார். அப்போது மனைவியைக் காப்பாற்ற முயன்ற ஆகாஷுக்கும் கத்திக் குத்து விழுந்தது. இருப்பினும், விடாமல் போராடிய ஆகாஷ், ஆஷுவிடமிருந்து கத்தியைப் பறித்து அவரையே குத்திக் கொன்றார். இதுதொடர்பாக போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

## மருதூர் தடுப்பணை பகுதியில் சீறிப்பாய்ந்து ஓடும் நீர்



மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதியில் பெய்துவரும் மழையால் தாமிரபரணி ஆற்றில் நீர்வரத்து அதிகரித்துள்ள நிலையில் மருதூர் தடுப்பணை பகுதியில் சீறிப்பாய்ந்து ஓடும் நீரை படத்தில் காணலாம்.

### கர்நாடகத்தில்

# முதல்வர் விழாவில் 10 பெண்கள் மயக்கம்!

பெங்களூர், அக்.22

கர்நாடகத்தில் முதல்வர் சித்தராமையா பங்கேற்ற நிகழ்ச்சியில் அடுத்தடுத்து மயங்கி விழுந்த பெண்களால் பரபரப்பான சூழல் நிலவியது.

தக்ஷிண கன்னடா மாவட்டத்தில் நேற்று நடைபெற்ற நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில் கர்நாடக முதல்வர் சித்தராமையா கலந்துகொண்டார். இந்நிகழ்ச்சிக்கு பயனாளிகளாக திரளான பெண்கள் வருகை தந்திருந்தனர். இந்த நிலையில், அங்கு வந்திருந்தவர்களுக்கு உணவும் பரிசுப் பொருள்களும் வழங்குவதில் தாமதமானது. இதற்காக, காலையிலிருந்தே அவ்விடத்துக்கு வந்திருந்த பெண்கள் உணவு, தண்ணீர் இன்றி வெகுநேரம் இருந்ததால் அடுத்தடுத்து மயங்கி விழுந்தனர்.

நிகழ்விடத்தில் 10 பெண்கள் மயங்கிக் கீழே விழுந்த நிலையில், அவர்கள் அனைவரும் உடனடியாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். அங்கு அவர்களுக்கு நீர்ச்சத்து உணவுகள் வழங்கப்பட்டு இப்போது நலம்பெற்றிருப்பதக தெரிவிக்கப்பட்டுள்ளது.



நீர்வரத்து அதிகரிப்பால் ஒகேனக்கல் காவிரி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் சுற்றுலா பயணிகள் அருவிகளில் குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.



# திருவெண்ணெய்நல்லூரில் நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாம்!

திருவெண்ணெய்நல்லூர், அக்.23

திருவெண்ணெய்நல்லூர் காந்தி நினைவு மேல்நிலைப் பள்ளியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை விழுப்புரம் மாவட்ட மருத்துவ குழு சார்பில் நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாம் நடைபெ ற்றது. முகாமிற்கு மாவட்ட மருத்துவ அலுவலர் செந்தில் தலைமை தாங்கினார். வட்டார மருத்துவ அலுவலர் காயத்ரி முன்னிலை வகித்தார்.

மாவட்ட வருவாய் அலுவலர் ஹரிதாஸ், மாவட்ட கவுன்சிலர் விசுவநாதன், ஒன்றிய குழு பெருந்தலைவர் ஓம்சிவசக்திவேல் ஆகியோர் மருத்துவ முகாமை பார்வையிட்டு மேற்பார்வை செய்தார். முகாமில் விழுப்புரம் மாவட்ட மருத்துவக் குழுவினர் சார்பில் பொது நரம்பியல், நுரையீரல், சிறுநீரகம், ரத்த அழுத்தம், இசிஜி சர்க்கரை நோய், காது, மூக்கு, தொண்டை, கண், தோல் மனநலம் மாற்றுத்திறனாளிகளுக்கு அடையாள அட்டை வழங்குதல் மருத்துவ சேவைகளை மருத்துவர்கள் மற்றும் 17 வகையான சிறப்பு மருத்துவ நிபுணர்களைக் கொண்டு பொதுமக்களுக்கு மருத்துவ சிகிச்சை வழங்கப்பட்டது.

இதில் பேரூராட்சி மன்ற தலைவர் அஞ்சுகம் கணேசன், பேரூராட்சி மன்றத் துணைத் தலைவர் ஜோதி, வட்டார சுகாதார மேற்பார்வையாளர் சங்கர், சுகாதார ஆய்வாளர் சத்தியமூர்த்தி, மருந்தாளுநர்கள் சுகுணகலா, சத்யராஜ், தனலட்சுமி உன்னிடம் பலர் கலந்து கொண்டனர்.

# உதயேந்திரம் பேரூராட்சி 4 வது வார்டு பகுதியில் ரூ.1 கோடி மதிப்பீட்டில் சமுதாய கூடம் கட்ட பணிகள் துவக்கம்!

வாணியம்பாடி,அக் 23

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி அடுத்த உதயேந்திரம் பேரூராட்சி 4வது வார்டு சி.வி பட்டறை பகுதியில் அயோத்திதாசர் பண்டிதர் நிதியின் கீழ் ரூபாய் 1 கோடி மதிப்பீட்டில் சமுதாய கட்டி



டம் கட்ட பூமி பூஜை போட்டு பணிகள் துவக்கி வைக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு பேரூராட்சி மன்ற முன்னாள் தலைவரும் 9 வது வார்டு உறுப்பினருமான ஆ. செல்வராஜ் தலைமை வகித்தார். மாவட்ட பிரதிநிதிகள் அம்பலவாணன், மேகநாதன், பேரூர் கழக பொருளாளர் மீர் முகமது கனி, மாவட்ட ஆதி திராவிடர் நலக்குழு துணை தலைவர் கோவி அசோகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். 4வது வார்டு திமுக கிளை செயலாளர் சுகுமார் அனைவரையும் வரவேற்றார்.

இதில் சிறப்பு அழைப்பாளராக பேரூராட்சி மன்ற தலைவர் ஆ.பூசாராணி கலந்துகொண்டு சமுதாயக் கூடன் கட்ட பூமி பூஜை செய்து பணிகளை தொடங்கி வைத்து இனிப்பு வழங்கினார். நிகழ்ச்சியில் பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் மரியஜோசப், சந்தியா, ரமேஷ், இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் வினோத் குமார், அருண் குமார் மற்றும் பேரூர் கழக இளைஞர் அணி

துணை அமைப்பாளர் அருண், இளங்கோ உட்பட கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

முடிவில் ஒப்பந்ததாரர் சந்தோஷ் குமார் நன்றி கூறினார்.



# திருப்பத்தூரில் உலக முதியோர்கள் தின விழா!

திருப்பத்தூர் அக்.23

திருப்பத்தூர் மாவட்டம், புதுப்பேட்டை ரோடு ஏழாவது தெருவில் உள்ள சேஞ்ச் பெண்கள் காப்பகத்தில் முதியோர்கள் தின விழா கொண்டாடப்பட்டது.

ரா. சுமதி மாவட்ட சமூக நல அலுவலர் மற்றும் வரதட்சணை தடுப்பு அலுவலர் தலைமையில், மருத்துவர் ஸ்டான்லி மருத்துவர் சந்திரா முன்னிலையில், சமூக ஆர்வலர் புரட்சி மற்றும் கல்லூரி பேராசிரியர் துரைமணி வரவேற்புரையில் நடைபெற்றது. உலக அளவில் முதியோர்களுக்கான தினமாக அக்டோபர் 1ஆம் தேதி கடைபிடித்து வருகிறது அதன் அடிப்படையில் சேஞ்ச் பெண்கள் காப்பகத்தில் 30க்கும் மேற்பட்ட முதியோர்களுக்கு அன்ன தானம், புத்தாடைகள், இனிப்பு, பழங்கள், பரிசுப் பொருட்களை வழங்கிய சேஞ்ச் நிறுவனத்தின் பழனிவேல் சாமி முதியோர் காலத்தில் அரசு ஓடிய நல திட்டங்கள் கிடைத்து வருகிறது இருந்தாலும் ஒரு சில பிரச்சனைகளால் முதியோர்கள் கைவிடப்படுகிறார்கள் என்று பேசினார். சுமதி சமூகநல அலுவலர் அவர்கள் முதியோர்களை நிறுவனத்தோடு பாசத்தோடுகவனித்துக்கொள்ள வேண்டும் அவர்களுடைய சிறு தேவைகளை பூர்த்தி செய்தால் அவர்களுடைய வாழ்க்கையில் மகிழ்ச்சியாக இருப்பார்கள் அவர்களுக்கு நல்ல உணவு நல்ல துணி இருந்தால் போதும் மகிழ்ச்சி நிலையில் இருப்பார்கள் என்று கூறினார்.

நிகழ்ச்சி ஏற்பாடு செய்த நிறுவன இயக்குனர் சரஸ்வதி ஒருங்கிணைப்பு ஐயப்பன் நன்றியுரை.

# வாணியம்பாடி அடுத்த உதயேந்திரம் பேரூராட்சி 8 வது, 9 வது வார்டு பகுதிகளில் சபா கூட்டம்!



வாணியம்பாடி, அக்.23

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி அடுத்த உதயந்திரம் பேரூராட்சி 8வது மற்றும் 9வது ஆகிய வார்டு பகுதிகளில் சபா கூட்டம் நடைபெற்றது கூட்டத்திற்கு பேரூராட்சி மன்ற தலைவர் ஆ.பூசாராணிதலைமை வகித்தார். பேரூர் திமுக செயலாளரும் பேரூராட்சி முன்னாள் தலைவரும் 9 வது வார்டு உறுப்பினருமானஆ.செல்வராஜ் முன்னிலையில் வகித்தார்.

கூட்டத்தில் இளநிலை உதவியாளர் சி.குமார் மற்றும் மேற்பார்வையாளர் பாபு ஆகியோர் கலந்து கொண்டு பகுதி மக்களின் குறைகள் கேட்டு அறிந்தனர். பின்னர் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மேலும் பேரூராட்சி பகுதியில் உள்ள 15 வார்டுகளிலும் அடிப்படை வசதிகள் செய்துள்ளமைக்கு தமிழக முதல்வருக்கும், தமிழக அரசுக்கும் நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றினர்.

முடிவில் பேரூராட்சி செயலாளர் குமார் நன்றி கூறினார்.



திருப்பத்தூர் அடுத்த கந்திலி ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட, ஆதியூர் ஊராட்சி மன்றம் அலுவலக கட்டிடத்தை, திருப்பத் தூர் சட்டமன்ற உறுப்பினர் நல்லதம்பி குத்துவிளக்கு ஏற்றி வைத்து திறந்து வைத்தார். பின்னர் இதனுடைய மதிப்பீடு 29 லட்சத்து 70 ஆயிரம் ரூபாய் மதிப்பாகும். இந்த நிகழ்ச்சியில் அதியூர் ஊராட்சி மன்ற தலைவர் மணிமேகலை ஆனந்தகுமார் துணைத் தலைவர் பழனிவேல் கந்திலி சேர்மன் திருமதி திருமுருகன்.துணைச் சேர்மன் மோகன் குமார். கந்திலி ஒன்றிய செயலாளர். குணசேகரன் மோகன்ராஜ் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர் .



# திருப்பத்தூர் மாவட்ட ஊராட்சி குழுவின் சாதாரணக் கூட்டம்!

திருப்பத்தூர் அக்.23

திருப்பத்தூர் மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவரும், மாநில பெற்றோர் ஆசிரியர் கழகத் துணைத் தலைவரும், நாட்டறம்பள்ளி மேற்கு ஒன்றிய கழக செயலாளருமான சூரியகுமார் தலைமையிலும், மாவட்ட ஊராட்சிக் குழு செயலர் சுசிலாராணி வரவேற்பிலும் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் துணைத்தலைவர் பிரியதர்சினி ஞானவேலன், மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர்கள் சரிதா, சசிகலா, சத்யவாணி, ஜெயா சிந்துஜாஜெகன் முனிவேல் R.சுபாஷ்சந்திரபோஸ்கவிதா தண்டபாணிசுப்பிரமணி, குணசேகரன் சத்யவாணி, உட்பட அலுவலக ஊழியர்கள் பலரும் கலந்து கொண்டனர்.



தேனி மாவட்டத்தில் முல்லைப் பெரியாறு வெள்ளப்பெருக்கு காரணமாகபாதிக்கப்பட்டகளிமேட்டுப்பட்டி,சூரியநாராயணபுரம் ஆகிய குடியிருப்பு பகுதியில் தென்னிந்திய பார்வர்ட் பிளாக் கட்சியினர் தலைவர் கே சி திருமாறன், பொதுச் செயலாளர் பி ஏ தெய்வம் உள்ளிட்டோர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 100க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு அரிசி,காய்கறி உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களை வழங்கினர்.

## தேனி அருகே துணிகரம்:

# ரூ.1.50 லட்சம் மதிப்புள்ள 7 பன்றிகள் திருட்டு!

தேனி,அக்.23

தேனி மாவட்டம் கண்டமனூர் அருகே எரதிம் மக்காள்பட்டியை சேர்ந்தவர்நாச்சியப்பன்மகன் தங்கவேல் (56).இவர் அதே ஊரில் உள்ள கண்மாய் பகுதியில் தகர செட் அமைத்து 37 பன்றிகளை வளர்த்து வருகிறார்.

இந்த நிலையில் சம்பவம் நாளான 14. 10.2025 ம் தேதியன்று அதிகாலை 3 மணிக்கு நாச்சியப்பன் சென்று பன்றிகளை பார்த்த போது, கம்பி கேட்டின் பூட்டை உடைத்து ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் மதிப்புள்ள 7 பன்றிகளை யாரோ திருடி சென்று விட்டதாக பாதிக்கப்பட்டவர் கண்டமனூர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். இப்புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்த போலீசார், அப்பகுதியில் உள்ள சிசிடிவி கேமரா பதிவுகளை ஆய்வு செய்து மர்ம நபர்களை தேடி வருகின்றனர்.

# ஒய்.எம்.சி.ஏ. குன்னூர் பொதுக்குழு கூட்டம்!



நீலகிரி,அக்.23

நீலகிரி மாவட்டம் குன்னூரில் குன்னூர் ஒய்.எம். சி.ஏ வின் பொதுக்குழு கூட்டம் அக்டோபர் 18 2025 ஒய் எம் சி ஏ வில் நடைபெற்றது

இக்கூட்டத்திற்கு தேசிய நிதி குழு உறுப்பினர் மற்றும் தற்காலிக ஒய்.எம். சி.ஏ நிர்வாக குழு தலைவர் K.S. பிரேம் ஆனந்த் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தை முனைவர் மாட்டின் தேவ பிரசாத் இறை வேண்டுதலோடு தொடங்கி வைத்தார். இக் கூட்டத்திற்கு தேர்தல் அதிகாரியாக சி. எஸ்.ஐ ஆயர் J. ரடிரிக்ஸ் பர்னபாஸ் தேர்தலை நடத்தினார்கள். நடைபெற்ற தேர்தலில் தலைவராக ஓபேத் விக்டர் அவர்களும்,

துணைத் தலைவராக பாஸ்டர் V. சாமுவேல் அவர்களும் பொருளாளராக பாலரமானந்தம் அவர்களும் தேசிய பொதுக்குழுபிரதிநிதியாக பாஸ்டர் R. ஸ்டீபன் ராஜ் அவர்களும் நிர்வாக குழு உறுப்பினராக திரு சிட்ரிக் ஜோசப், திரு G. ஜான்சன், திருநேல்இஸ்ரேல்பேரின்பம், திரு K. கிப்சன், திரு S. ஜேம்ஸ், அவர்களும் ஒருமனதாக தேர்வு செய்யப் பட்டார்கள்.

ஒய்எம்சிஏவின்பொதுச் செயலாளர் திரு G. பிரேம் ஆனந்த் நன்றி தெரிவித்தார் தேசிய ஒய்எம்சிஏ தேர்தல் பொறுப்பு செயலாளர் திரு ரிஜோலின் கூட்டத்தை ஒருங்கிணைத்தார்.

## வாணியம்பாடி அருகே

# குருமன்ஸ் பழங்குடி மக்கள் கிளை சங்கம் சார்பில் கொடியேற்றும் விழா!

வாணியம்பாடி, அக்.23

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி அடுத்த முல்லை கிராமம் சின்ன சாமி வட்டம் குருமன்ஸ் பழங்குடி மக்கள் கிளை சங்கம் சார்பில் கொடியேற்றும் விழா நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு சங்க தலைவர் எம்.சி. ராஜாதலைமை வகித்தார். செயலாளர் ஜி.வர்தராஜ், பொருளாளர் இரா.டில்லிராஜா ஆகியோர் முன்னிலை வகித்தனர். எம்.சி.கோபால் அனைவரையும் வரவேற்றார்.

இதில் சிறப்பு அழைப்பாளர்களாக மாநிலத் தலைவர் எஸ்.எஸ். சிவலிங்கம், வீரபத்திரன், அரங்கநாதன், தர்மலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டு சங்க கொடியை ஏற்றி வைத்து இனிப்பு வழங்கினார். தொடர்ந்து அன்னதானம் வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில் குருமன்ஸ் பழங்குடி மக்கள் பழங்குடி கலாச்சாரம் மற்றும்



பழக்க வழக்கத்துடன் நூற்றாண்டு காலமாக வாழ்ந்து வருவதால் அவர்களுக்கு எம்.பி.சி சான்றிதழுக்கு பதிலாக எஸ்.டி( மலைவாழ் மக்கள்) சான்றிதழ் வழங்க வேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளனர்.'நிகழ்ச்சியில்முல்லை ஊராட்சி மன்ற தலைவர் ஓ. சீனிவாசன், முல்லை சி.சந்திரன், சங்க துணைத் தலைவர்கள்ஆர்.ரமேஷ்(எ) சித்தண்ணன், டி.கோபிகிருஷ்ணன், ஆர்.ராஜ்குமார், ஜி.சரவணன், பி.ரவி, துணை செயலாளர் எம்.சி.மகேந்திரன், உட்பட சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர். முடிவில் துணை செயலாளர் எம்.சி.மகேந்திரன் நன்றி கூறினார்.

## சிவகாசி தீபாவளிக் கொண்டாட்டத்தில்

# பட்டாசு வெடித்த 11 சிறுவர் சிறுமியர்கள் உள்பட 15 பேர் காயம்!

சிவகாசி,அக்.23

பட்டாசுகளின் உற்பத்தி நகரமான சிவகாசியில் பொதுமக்கள் பட்டாசுகளை வெடித்து மிகுந்த உற்சாகத்துடன்தீபாவளிப் பண்டிகையை கொண்டாடினர். பட்டாசுகள் வெடித்தபோது சிவகாசி மற்றும் சுற்று வட்டாரத்தின் நேரு காலனி, எம்.ஜி.ஆர்.நகர், திருப்பதி நகர், கள்ளிப்பட்டி, சாட்சியாபுரம், சாரதா நகர் போன்ற பகுதிகளை சேர்ந்த 10 வயதுக்குட்பட்ட சிறுவர், சிறுமியர்கள் 11 பேர் உள்பட 15 பேர் எதிர்பாராத விதமாக தீக்காயமடைந்து சிவகாசி அரசு மருத்துவமனைக்கு



சிகிச்சைக்காக அழைத்து வரப்பட்டனர். தீக்காயமடைந்த 15 பேரில் 11 பேர் முதலுதவி சிகிச்சை பெற்று வீடு திரும்பிய நிலையில், காயமடைந்த 4 பேர் உள் நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். நடப்பாண்டில் புதிதாக அறிமுகம் செய்யப்பட்ட கையில் வைத்து வெடிக்கப்படும் பேன்சி ரகப் பட்டாசுகளை வெடித்தபோது அவை வெடித்து சிதறியதில் பலரும் தீக்காயமடைந்ததாக போலீசாரின் விசாரணையில் தெரியவந்தது.

Owned, Printed and Published by N. JAYAPRAKASH printed at Ali Mohamed Sayeed Offset Printers NO.29, V.N. DASS ROAD, BORDER THOTTAM, MOUNT ROAD Chennai 600002.
Published from Old No. 73/C 13 Nagaratchi cleaners colony, Housing unit, south ukkadam Coimbatore641 001. Editor: N.JAYAPRAKASH

உள்ளாட்சி அரசு





# புலியூர் பஸ் நிலையத்தில் புரட்சித்தலைவர் எம்ஜிஆர், புரட்சித்தலைவி அம்மா படத்திற்கு மலர் தூவி மரியாதை!

கிருஷ்ணகிரி,அக்.23

புலியூரில் கிராமத்தில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் 54 ஆம் ஆண்டு தொடக்க விழாவை முன்னிட்டு கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம் காவேரிப்பட்டினம் தெற்கு ஒன்றிய கழகம் சார்பில் ஒன்றிய கழக செயலாளர் ரவிச்சந்திரன் தலைமையில் புலியூர்பஸ் நிலையத்தில் புரட்சித்தலைவர் எம் ஜிஆர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் திருஉருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது இந்நிகழ்ச்சியில் முன்னாள் ஒன்றிய கழக செயலாளர் பிரபாகரன் கூட்டுறவு சங்க தலைவர் பண்ணந்தூர் பழனிசாமி தொழிலதிபர் பழனி விவசாய அணி ஒன்றிய செயலாளர் கணேசன் மீனவரணி ஒன்றிய செயலாளர் கண்ணப்பன் ஒன்றிய துணைச்செயலாளர் சுரேந்திரன் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் சிவலிங்கம் நாகராஜ் சக்திவேல் இளங்கோ முன்னாள் ஊராட்சி கழக செயலாளர் வேடியப்பன் முன்னாள்ஒன்றியஅவைத் தலைவர்கள் கிருபானந்தம் ஜெகதீசன் சக்கரவர்த்தி மற்றும் புருஷோத்தமன் சங்கர் வீரப்பன் துரைசங்கர் ஞானபிரகாசம் ராசு எம்.சேன்ட் வேடியப்பன் முருகன் செந்தில்குமார் சிராஜ் விருத்திக்ரோஷன் ஜெய் ஹிந்த் உதயகுமார் டேவிட் மாலிக் தயாளன் ராஜப்பன் சரவணன் சீனிவாசன்மற்றும்கழகநிர்வாகிகள் 200 க்கும் மேற்பட்டோர்கலந்துகொண்டனர்.

# பென்னாகரம் ஏர்ரகொல்லனூர் ஏரியில் 3500 பனை விதை நடவு!

தர்மபுரி, அக்.23

தர்மபுரி மாவட்டம் பென்னாகரம் ஏர்ரகொல்லனூர்ஏரிபகுதியில் பென்னாகரம் வருவாய் துறை,பென்னாகரம்பேரூராட்சி நிர்வாகம் மற்றும் பென்னாகரம் பத்திரிக்கையாளர் மன்றமும் இணைந்து பனை விதை நடவு செய்யும் நிகழ்ச்சி வட்டாட்சியர் சண்முகசுந்தரம் தலைமையில் இன்று நடைபெற்றது இதில் சுமார் 3500 பனை விதைகள்நடவுசெய்யப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் பென்னாகரம் பேரூராட்சி தலைவர் வீரமணி, பேரூராட்சி செயல் அலுவலர் செந்தில் குமார், பென்னாகரம் பத்திரிகையாளர் மன்ற தலைவர் ஆ. ஜீவானந்தம், செயலாளர் சிவகுமார் மற்றும் பேரூராட்சி கவுன்சிலர்கள், பென்னாகரம் பத்திரிகையாளர் மன்ற நிர்வாகிகள் மற்றும் பத்திரிக்கையாளர்கள், பேரூராட்சி நிர்வாக அலுவலர்கள், தூய்மை பணியாளர்கள் உள்பட ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர்.



பென்னாகரம் ஏர்ரகொல்லனூர் ஏரியில் 3500 பனை விதை நடவு செய்யும் நிகழ்ச்சி



### உதயேந்திரம் பேரூராட்சி பகுதியில்

# ரூ.2 கோடி மதிப்பீட்டில் கழிவு நீர் கால்வாய் கட்ட பூமி பூஜை!

வாணியம்பாடி,அக் 23

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி அடுத்த உதயேந்திரம் பேரூராட்சி 3 மற்றும் 4 வது வார்டு சி.வி பட்டறை முதல் தேவமங்களம், சுப்பராயன் கோயில் காந்திநகர் வரை கழிவுநீர் கால்வாய் வசதி இல்லாமல் இருந்து வந்தது. இது குறித்து பகுதி மக்கள் கழிவு கால்வாய் கட்ட பேரூராட்சி அலுவலகத்தில் கோரிக்கை வைத்தனர். அதன் அடிப்படையில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பேரூராட்சி நிர்வாகம் சார்பில் சி.ஜி.எஃப் மூலதன மானிய திட்டத்தின் கீழ்(202526 ஆண்டு) மழை நீர் வடிகால்வாய் கட்ட ரூபாய் 2 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இப்பணிதுவங்க பூமி பூஜை போடப்பட்டது.

நிகழ்ச்சிக்கு பேரூராட்சி மன்ற முன்னாள் தலைவரும் 9 வது வார்டு உறுப்பினருமான ஆ.செல்வராஜ் தலைமை வகித்தார். மாவட்ட பிரதிநிதிகள் அம்பலவாணன், மேகநாதன், பேரூர் கழக பொருளாளர் மீர் முகமது கனி ஆகியோர் முன்னிலை வகித்தனர். 3 வது வார்டு உறுப்பினர் ஆர்.மகேஸ்வரி அனைவரையும் வரவேற்றார்.

இதில் சிறப்பு அழைப்பாளராக பேரூராட்சி மன்ற தலைவர் ஆ.பூசாராணி கலந்துகொண்டு பூமி பூஜை செய்து பணிகளை தொடங்கி வைத்து இனிப்பு வழங்கினார். தொடர்ந்து பொதுமக்களுக்கு பேரூராட்சி பேரூராட்சி பகுதியில் நடைபெற்ற சாதனைகள் குறித்து துண்டு பிரசுரங்களை வழங்கினார்.

நிகழ்ச்சியில் 4வது வார்டு திமுக கிளை செயலாளர் சுகுமார், மன்ற உறுப்பினர்கள் மரியஜோசப், சந்தியா, ரமேஷ், மாவட்ட ஆதி திராவிடர் நலக்குழு துணை தலைவர் கோவி அசோகன், வினோத் குமார், அருண் குமார் மற்றும் பேரூர் கழக இளைஞர் அணி துணை அமைப்பாளர் அருண், இளங்கோ உட்படகட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் கலந்து கொண்டனர். முடிவில் ஒப்பந்ததாரர் சிவக்குமார் நன்றி கூறினார்.



வாணியம்பாடி அருகே எஸ்.எப்.எஸ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில்

# ஏ.பி.ஜே.அப்துல் கலாம் பிறந்த நாளை முன்னிட்டு 2, 50,000 விதை பந்துகள் தயார் செய்து சாதனை!

வாணியம்பாடி, அக்.23

திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி அடுத்த ஜனதாபுரம் பகுதியில் எஸ்.எப்.எஸ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி இயங்கி வருகிறது. இதில் ஆயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர். இந்த நிலையில், முன்னாள் ஜனாதிபதி ஏ.பி.ஜே அப்துல் கலாம் 94வது பிறந்தநாளைமுன்னிட்டு, விதை பந்துகள் தயார் செய்யும் நிகழ்ச்சி பள்ளி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு பள்ளி தாளாளர் டோனி தலைமை வகித்தார். எஜுகேஷனல் கவுன்சிலர் அருட்தந்தை சி.செபஸ்டின் ராஜ், ஜென்ரல் கவுன்சிலர் அருட்தந்தை கிறிஸ்துராஜ் முன்னிலை வகித்தனர்.

பள்ளி முதல்வர் சவரி முத்து வரவேற்றுப்பேசினார். இந்த நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினர் களாக ஐ.பி.எல் கிரிக்கெட் வீரர் சஞ்சய் யாதவு, தனியார் பள்ளி மாவட்டக் கல்வி அலுவலர் நேசபிரபா கலந்துகொண்டு இயற்கை மற்றும் மரங்கள் நன்மைகள் குறித்து எடுத்து உரைத்தனர். இதில், சிறப்பு அழைப்பாளராக மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் புண்ணிய கோட்டி கலந்து கொண்டு பல்வேறு வகையான விதைகளை ஆசிரியர்களிடம் வழங்கி விதை பந்துகள் தயார் செய்யும் பணியை தொடங்கி வைத்து சிறப்புரை யாற்றினார். அப்போது அவர் பேசியதாவது: இங்கே தயாரிக்கப் படும் 2 லட்சத்து 50 ஆயிரம் விதைப் பந்துகளை அறக்கட்டளைகள் மூலமாக, பல்வேறு பகுதிகளில் விதைக்கப்படும். இதன் மூலம் முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் கனவான ஒரு கோடி மரக்கன்றுகளை நடும் கனவு நினைவாகும். மாணவர்கள் நேரம் கிடைக்கும் போதெல்லாம் மரங்களின் நன்மை குறித்து மற்றவர்களும் எடுத்து கூற வேண்டும், மரக்கன்றுகளை நட வேண்டும். அப்போது தான், சுற்றுச்சூழல் சிறப்பாக அமையும். சுவாசிக்க மாசற்றகாற்றுகிடைக்கும். சுற்றுச்சூழல் பாதுகாக்க இதுவே ஒரு நல்ல முயற்சி ஆகும் என்று பேசினார். இந்த நிகழ்ச்சியில் பள்ளி மாணவர்கள் 250 பேர் கலந்து கொண்டு 3 மணி நேரத்தில் 2 லட்சத்து 50 ஆயிரம் விதை பந்துகள் தயார் செய்து முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் உருவம், இந்திய வரைபடம்ஆகியவற்றை உருவாக்கி சாதனை படைத்தனர். இந்நிகழ்ச்சியில்மாவட்டகாவல்துறை கண்காணிப்பாளர் மகாலட்சுமி, போக்கு வரத்து காவல் ஆய்வாளர் ஞானதி, நகர திமுக செயலாளர் வி.எஸ்.சாரதிகுமார், மாவட்ட சுற்றுசூழல் ஒருங்கிணைப்பாளர் இளவரசி, முத்தமிழ் மன்ற செயலாளர் என்.பிரகாசம், கருணை இல்ல நிறுவனர் சுபாஷ் சந்திரன், பள்ளி நிர்வாகிகள், ஆசிரியர்கள், மாணவர்கள்உட்படபலரும்கலந்து கொண்டனர். இந்த நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை பள்ளி பொருளாளர் ஜெயக்குமார் மற்றும் விக்டர் சாமுவேல் செய்திருந்தனர். முடிவில், ஜெப கிங்ஸிலின் நன்றி கூறினார்.

# புன்னகையும் பாசமும் பகிர்ந்த ரொட்டரி கோல்டன் சீனியர்ஸ் தீபாவளி அன்பளிப்பு திருவிழா!



சென்னை, அக்.23

மூத்த குடிமக்களுக்காக ரொட்டரி இன்டர்நேஷனல் மாவட்டம் 3233 சார்பில் நடைபெற்ற 'ரொட்டரி கோல்டன் சீனியர்ஸ் தீபாவளி அன்பளிப்பு மதிய விருந்து' விழா உற்சாகமாக நடைபெற்றது.

சென்னை முழுவதிலிருந்து 1,000க்கும் மேற்பட்ட மூத்தோர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சி அமிஞ்சிகரையில் உள்ள ஐயாவூ மஹாலில் நடைபெற்றது.

இசை, நகைச்சுவை மற்றும் இனிய விருந்தினால் மகிழ்ச்சிகரமான நாளாக அமைந்த இந்த விழாவில், புலவர் இராமலிங்கம் அவர்களின் உரை சிரிப்பையும் நினைவுகளையும் உருவாக்கியது. தலைமை விருந்தினராக திரு எஸ். வே. சேகர், ரொட்டரி மாவட்ட ஆளுநர் Rtn. டி. தேவேந்திரன், முன்னாள் ஆளுநர்கள் மற்றும் மூத்த ரொட்டரியர்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி ஒருங்கிணைப்பை Rtn. ஸ்ரீகுமார் சிறப்பாக முன்னெடுத்தார். "மூத்த குடிமக்கள் சமூகத்தின் தூண்கள்;

அவர்களுக்கு பாசமும் மதிப்பும் அளிப்பதே ரொட்டரியின் நோக்கம்," என Rtn. டி. தேவேந்திரன் தெரிவித்தார். மூத்தோரின் முகங்களில் புன்னகையை மலரச் செய்த இந்த அன்பளிப்பு விருந்து,

"Service Above Self – தன்னலமற்ற சேவை" என்ற ரொட்டரியின் அடிப்படை கோட்பாட்டை பிரதிபலித்தது.

### பவர், ஸ்டைல், மரபு புதிதாய் வடிவமைக்கப்பட்ட

# புத்தம் புதிய ஸ்கோடா ஆக்டேவியா ஆர்எஸ், நவ 06 முதல் வாடிக்கையாளர்களுக்கு டெலிவரி ஆரம்பம்!

சேலம்,அக்.23–

ஸ்கோடா ஆட்டோ இந்தியா இந்தியாவில் தனது 25 ஆண்டு பயணத்தை கொண்டாடுகிறது. இது உண்மையான வரலாற்றுச் சின்னமான, புதிய ஆக்டேவியா ஆர்எஸ் இன் மீள்வருகையை குறிக்கிறது.. முழுவதும் கட்டமைக்கப் பட்டயூனிட்டாககுறைந்த எண்ணிக்கையிலேயே கிடைக்கும் ஆக்டேவியா ஆர்எஸ், சிறந்த ஓட்டும் அனுபவம், துணிச்சலான வடிவமைப்பு மற்றும் தனித்துவமான ஆர்எஸ் பாணியை வெளிப்படுத்துகிறது. இந்தியாவில் ரசிகர்களுக்காக ஒரு தனிப்பட்ட அடையாளமாக திரும்ப வருகிறது. வெளியீட்டு விழாவில் ஸ்கோடா ஆட்டோ இந்தியா பிராண்ட் டைரக்டர் ஆஷிஷ் குப்தா கூறுகையில் : "ஆக்டேவியா ஆர்எஸ் க்கு பெற்ற ரெஸ்பான்ஸ் அற்புதமாக உள்ளது. இந்த ஐகானிக் மாடல் இந்திய ஓட்டுனர் ரசிகர்களின் ஆர்வத்தை தூண்டி, உலகளாவிய ஆக்டேவியா ஆர்எஸ்ன் புகழ் பெற்ற அந்தஸ்தை உறுதிப்படுத்துகிறது. ஸ்கோடா ஆட்டோ இந்தியாவில் 25 அற்புதமான ஆண்டுகளை கொண்டாடும் போது, உலக தரத்திற்குரிய கார்கள் வழங்கும் எங்கள் உறுதி முன்பு போலவே வலுவாக இருக்கிறது. ஆர்எஸ் பேட்ஜ் வெறும் செயல்திறனை மட்டுமல்ல, அதற்கு மேலும் ஒரு அடையாளத்தை காட்டுகிறது. இது எங்கள் வாடிக்கையாளர்கள் ஸ்கோடா பிராண்டுடன் கொண்ட உணர்ச்சி பிணைப்பு மற்றும் நம்பிக்கையை பிரதிபலிக்கிறது. ஸ்கோடா குடும்பத்தில் புதிய தலைமுறை ரசிகர்களை வரவேற்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம், மேலும் இந்த சந்தையில் எங்கள் பிராண்டின் வலுவான மரபையும் ரசிகர்களின் ஆர்வத்தையும் தொடர்ந்தும் கட்டமைக்கிறோம். ஆக்டேவியா ஆர்எஸ் இன் மையத்தில் 2.0 டிஎஸ்ஐ டர்போசார்ஜ் செய்யப்பட்ட பெட்ரோல் எஞ்சின் உள்ளது.




7 ஸ்பீடு டிஎஸ்ஜி ஆட்டோமெடிக் டிரான்ஸ்மிஷனுடன் இணைந்த இந்த கார் 0–100 கிலோமீட்டர்/எச் வேகத்தை வெறும் 6.4 நொடிகளில் அடைகிறது; மின்னணு முறையில் வரையறுக்கப்பட்ட அதிகபட்ச வேகம் மணிக்கு 250 கிமீ. அதன் மேம்பட்ட சேசிஸ் அமைப்பு, புரோக்ரெசிவ் ஸ்டியரிங் மற்றும் ஸ்போர்ட்ஸ் சஸ்பென்ஷன் நுட்பமான ஹேன்ட்லிங் மற்றும் சிறந்த ஓட்டும் அனுபவத்தையும் வழங்குகின்றன. புதிய ஆக்டேவியா ஆர்எஸ், ஸ்கோடாவின் வலிமையான வடிவமைப்பை வெளிப்படுத்துகிறது; முழு எல்இடி மேட்ரிக்ஸ் ஹெட்லைட்டுகள், டைனமிக் எல்இடி டெயில்லேம்புகள் மற்றும் பிளாக் ஸ்டைலிங் எலிமெண்ட்கள் இதனை மேலும் கவர்ச்சிகரமாகக் காட்டுகின்றன. ஆக்டேவியா ஆர்எஸ் வடிவத்தை ஐந்து பிரகாசமான நிறங்கள் மேலும் சிறப்பாக வெளிப்படுத்துகின்றன: மாம்பா கிரீன், கேண்டி ஒயிட், ரேஸ் புளூ, மேஜிக் பிளாக் மற்றும் வெல்வெட் ரெட் ஆகிய நிறங்களில் கிடைக்கும். ஒவ்வொரு ஸ்கோடா காரையும் போல், ஆக்டேவியா ஆர்எஸ்,க்கும் ஸ்கோடா ஆட்டோ இந்தியா வழங்கும் தொழில்துறையிலேயே சிறந்த உரிமையாளர் பயன்கள் வழங்கப்பட்டுள்ளன. இதில் 4 ஆண்டு/1,00,000 கிலோமீட்டர் வாரண்டி மற்றும் 4 ஆண்டு இலவச ரோட்சைட் அசிஸ்டென்ஸ் அடங்கும். புதிதாய் வடிவமைக்கப்பட்ட ஆக்டேவியா ஆர்எஸ் எக்ஸ்ஷோரூம் விலை ரூ.49,99,000 ஆகும்.



கள்ளக்குறிச்சி மாவட்டம் திருநாவலூர் ஊராட்சி ஒன்றியம் உ.செல்லூர் ஆதிதிராவிட பகுதி கிழக்குதெரு சுடுகாட்டு பாதை சேறும் சகதியுமாக உள்ளது கண்டித்து கிளை தலைவர் திவாகர் தலைமையில் நாற்று நடும் போராட்டம் நடைபெற்றது.இதில் மாவட்ட செயலாளர் சிவாக்குமார் மாவட்ட தலைவர் சதிஷ்குமார் ஒன்றிய செயலாளர் சக்கரவர்த்தி ஒன்றிய தலைவர் ரகு மற்றும் பொதுமக்கள் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

### தேனி அருகே

# தீபாவளி அன்று நடந்த சோகமான சம்பவம்; கணவன், மனைவி இருவரும் விஷம் அருந்தி தற்கொலை! போலீசார் விசாரணை!!

தேனி,அக்.23

தேனி மாவட்டம் கண்டமனூரில் சத்தியா காலனி பகுதியைச் சேர்ந்தவர் ஆண்டியப்பன் மகன் முதியவர் கருப்பையா (61). இவரது மனைவி மூதாட்டி பார்வதி (58). இவரது மனைவிக்கு கடந்த ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பு பாத்ரூமில் வழுக்கி விழுந்ததில் இடுப்பில் அடிபட்டு உடல்நிலை சரியில்லாமல் இருந்தது. அப்போது மூதாட்டி கணவரிடம் நான் இல்லாத காலத்தில் நீயும் இருக்கக் கூடாது என கூறி வந்ததாக தெரிகிறது. இந்த நிலையில் அக்டோபர் 19ம் தேதி அன்று இரவு கணவன் மனைவி இருவரும் வீட்டில் தூங்க சென்றுள்ளனர். பின்னர் மறுநாள் காலை தீபாவளி என்பதால் அவரது மகன் மரக்காமலை சென்று பார்த்த போது, அவர்கள் இருவரும் விஷம் குடித்து, வாயில் நுரை தள்ளியபடி இறந்த நிலையில் கிடந்ததாக கூறப்படுகிறது. இதையடுத்து இந்த சம்பவம் குறித்து கண்டமனூர் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

தீபாவளி அன்று கணவன் மனைவி இருவரும் தற்கொலை செய்து கொண்ட சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

# வாணியம்பாடி நியூடவுன் ரயில்வே கேட் ஒரு மணி நேரத்திற்கு மேலாக முடியதால் ஆத்திரமடைந்த பொதுமக்கள்! ரயில்வே தண்டவாளத்தில் நின்று போராட்டம்!!

வாணியம்பாடி, அக்.23

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி நகர பகுதியில் இருந்து நியூடவுன், நேதாஜி நகர், ஜீவாநகர், இந்திரா நகர், உள்ளிட்ட நகரின் பிற பகுதிகளுக்கு செல்ல நியூடவுன் ரயில்வே கேட்ட் வழியாக தினமும் ஆயிரக் கணக்கான பொதுமக்கள், வாகன ஓட்டிகள், பள்ளி, கல்லூரி மாணவர்கள் சென்று வருகின்றனர்.

மேலும் ரயில்வே கேட் வழியாக நாள் ஒன்றுக்கு 60 க்கும் மேற்பட்ட ரயில்கள் கடந்து செல்வதால் ரயில்வே கேட் அடிக்கடி மூடப்படுகிறது,



இதன்காரணமாகஅப்பகுதியில் ரயில்வே மேம்பாலம் அமைக்க பொதுமக்கள், வணிகர்கள், மாணவர்கள் என பலதரப்பட்ட மக்கள் போராட்டங்கள் செய்தும் இது வரையில் எந்த பலனுமில்லை.

இந்நிலை யில் நேற்று இரவு ரயில்வே கேட் சுமார் ஒரு மணி நேரத்திற்கு மேலாக மூடப்பட்டதால் அவ்வழியாக சென்ற வாகன ஓட்டிகள் மற்றும் பொதுமக்கள் ஆத்திரமடைந்து ரயில்வே கேட்டில் நுழைந்து பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற நகர போலீஸார் மற்றும் ரயில்வே போலீசார் போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் பேச்சுவார்த்தநடத்திஉடனடியாக ரயில்வே கேட் திறக்க வழிவகை செய்தனர்.

இதனால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. போராட்டம் காரணமாகரயில்வேபாதையில் 4 க்கும் மேற்பட்ட பயணிகள் ரயில் மற்றும் சரக்க ரயில்கள் ஆங்காங்கே சுமார் 15 நிமிடங்களுக்கு மேலாக நிறுத்தி வைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.



ஊத்தங்கரை அருகே சிங்காரப்பேட்டையில்

# நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாம்!

ஊத்தங்கரை அக்.22

கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை அடுத்த சிங்காரப்பேட்டை அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாம் நடைபெற்றது. மருத்துவமுகாம்மாவட்ட மருத்துவ இயக்குனர் டாக்டர் ரமேஷ் குமார் தலைமையில் நடைபெற்றது . தொழு நோய் மருத்துவ அதிகாரி டாக்டர் அன்பு அரசு, கிருஷ்ணகிரி மருத்துவ கல்லூரி மருத்துவமனை குழந்தைகள் நல மருத்துவர் டாக்டர் நிதியழகன், மாவட்ட இணை இயக்குனர் அலுவலகத்தில் இருந்து டாக்டர் சண்முகவேல் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற மருத்துவ முகாமை ,பர்கூர் எம்எல் ஏவும் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட திமுக செயலாளர் மதியழகன் முகாமை துவங்கி வைத்தார். நிகழ்ச்சியில் திமுக மாவட்ட பொருளாளர் கதிரவன், ஒன்றிய செயலாளர்கள் எக்கூர் செல்வம் ,குமரேசன், ரஜினி செல்வம் , ஊத்தங்கரை நகர செயலாளர் தீபக், மாவட்ட பொறி யாளர் அணி காந்தி, மாவட்டத் துணைச் செயலாளர் ஆசிரியர் சந்திரன், அரசு டாக்டர்கள் செந்தில்குமார், மதன் குமார், கோபி ,வட்டார மருத்துவ அலுவலர்கள் டாக்டர்அன்பரசி,சுகாதார ஆய்வாளர் தமிழமுதன் மற்றும் காரப்பட்டு, அனுமன் தீர்த்தம், சாமல்பட்டி வட்டார மருத்துவ அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சிங்காரப்பேட்டையில் சுற்றியுள்ள கிராம பொது மக்கள் கலந்து கொண்டு மகப்பேறு , இருதய நோய், காசநோய், சக்கரை நோய் போன்ற அனைத்து வகையான மருத்துவ ஆலோசனைகளை சுற்று வட்டார கிராம பொதுமக்கள் பெற்று சென்றனர்.



கள்ளக்குறிச்சி அருகே

# பட்டாசு வெடித்ததில் கட்டிடம் இடிந்து விழுந்தது!

கள்ளக்குறிச்சி,அக்.22

தீபாவளி பண்டிகை நாடு முழுவதும் நேற்று உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டு வருகிறது. மக்கள் காலையிலே எழுந்து, குளித்து, புத்தாடைகளை உடுத்தி, இனிப்பு மற்றும் பலகாரங்களை உண்டு, வாழ்த்துகளை பரிமாறி, தீபாவளி பண்டிகையை உற்சாகத்துடன் கொண்டாடி வருகின்றனர். சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை பட்டாசுகளை வெடித்து மகிழ்ந்து வருகின்றனர்.

இந்த நிலையில் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் சிறுவர்கள் பட்டாசு வெடித்த போது கட்டிடம் ஒன்று இடிந்து விழுந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.தியாகதுருகம்அருகே உள்ள கூத்தக்குடி கிராமத்தில் மாரியம்மன் கோவில் உள்ளது. இந்த கோவிலுக்கு சொந்தமான பொருட்கள் மற்றும் உபகரணங்கள் அருகில் உள்ள கட்டிடத்தில் வைக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் அந்தப் பகுதியை சேர்ந்த சிறுவர்கள் இன்று பட்டாசு வெடித்தபோது, எதிர்பாராதவிதமாக ஒரு பட்டாசு, அந்த கட்டிடத்திற்குள் விழுந்ததாக தெரிகிறது. இதில் அந்த கட்டிடம் முழுவதும் இடிந்து விழுந்து சேதமானது. இருப்பினும்அங்குயாரும் இல்லாததால் பெரும் அசம்பாவிதம் தவிர்க்கப்பட்டது. மேலும் அங்கு வைக்கப்பட்டிருந்த கோவிலுக்கு சொந்தமான உபகரணங்கள் சேதமடைந்ததாக கூறப்படுகிறது. இந்த சம்பவத்தால் அந்தப்பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

வாணியம்பாடி அருகே

# பாலாற்றில் வெள்ளப்பெருக்கு!

## சாமி கும்பிட சென்ற 17 பேரை தீயணைப்பு துறையினர் பத்திரமாக மீட்டனர்!!



வாணியம்பாடி,அக்.22

திருப்பத்தூர் மாவட்டம் தமிழக ஆந்திர மாநில எல்லையான தகர குப்பம் அடுத்த ஜோதி நகர் பகுதியில் காட்டு கோயில் அமைந்துள்ளது.

இன்றுதீபாவளிதிருநாளைமுன்னிட்டு சாமி கும்பிடவும், இறந்தவர்களுக்கு திதி கொடுக்க ஆம்பூர் அடுத்த துத்திப்பட்டு பகுதியில் இருந்து 4 பேரும், குருபானி குண்டா கிராமத்தை சேர்ந்த 8 பேரும், வெள்ள

நாயக்கனேரி கிராமத்தை சேர்ந்த 5 பேர் என மொத்தம் 17 பேர்,(3 குழந்தைகள், 6 பெண்கள் மற்றும் 8 ஆண்கள் என மொத்தம் 17 பேர்) சென்றுள்ளனர்.

இன்று காலை வெவ்வேறு பகுதிகளில் இருந்து ஆட்டோக்களில் தகரக் குப்பம் வரை சென்று அங்கிருந்து ஜோதி நகர் காட்டுப்பகுதிக்கு பாலாற்றைக் கடந்து நடந்து செல்ல வேண்டும்.

காலை நேரத்தில் ஆற்றில் நீர் குறைவாக இருந்தது. திடீரென ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதால் காட்டுக் கோயிலுக்கு சாமி கும்பிட சென்றவர்கள் அதிர்ச்சடைந்து நாட்றம்பள்ளி காவல் துறையினருக்கு தகவல் தெரிவித்துள்ளனர். தகவலின் பேரில் நாட்றம்பள்ளி தீயணைப்பு துறை பொறுப்பு அலுவலர் சேகர் தலைமையில் 6 பேர் கொண்ட தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று காட்டு கோயில் பகுதியில் இருந்த 17 பேரை கயிறு கட்டி பத்திரமாக மீட்டனர்.

இச் சம்பவம் அப்பகுதியில் காட்டுத் தீ போல் பரவி பெரும் பரப்பரப்பை ஏற்படுத்தியுள்ளது.

நாமக்கல் அருகே பயங்கரம்:

# பத்திர எழுத்தரின் உதவியாளர் வெட்டி படுகொலை!

## சாலையோரம் உடல் வீச்சு; மர்மநபர்களுக்கு வலை!!

நாமக்கல்,அக்.22

நாமக்கல் அருகே, பத்திர எழுத்தரின் உதவியாளர், மர்ம நபர்களால் வெட்டி படுகொலை செய்யப்பட்டு, சாலையோரம் உடல் வீசப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

நாமக்கல் மாவட்டம், கொசவம்பட்டி, நான்கு ரோடு சத்யா நகர் பகுதியில், நேற்று காலை அப்பகுதி மக்கள், 'வாக்கிங்' சென்று கொண்டிருந்தனர். அப்போது, சாலை ஓரமாக ஆண் சடலம் ஒன்று கிடப்பதை கண்டு அதிர்ச்சியடைந்தனர்.

உடனடியாக, நாமக்கல் போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். சம்பவ இடத்திற்கு சென்ற நாமக்கல் போலீசார் நடத்திய விசாரணையில், சடலமாக கிடந்தவர், காமராஜபுரத்தை சேர்ந்த பாலசுப்ரமணி மகன் கோபிகுமரன், (30) என்பது தெரிந்தது. இவருக்கு இன்னும் திருமணமாகவில்லை.

பத்திர எழுத்தரின் உதவியாளர் மற்றும் பகுதி நேர கார் டிரைவர் உள்ளிட்ட பணிகளையும் செய்து வந்துள்ளார்.

நேற்று முன்தினம் காலை, வேலைக்கு சென்ற கோபிகுமரன், இரவு வீடு திரும்பவில்லை. இந்நிலையில், தீபாவளியான நேற்று காலை, கழுத்து மற்றும் வயிற்று பகுதிகளில் வெட்டு காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். மோப்பநாய், 'ஸ்டெபி' வரவழைக்கப்பட்டு மோப்பம் பிடித்து சென்றது. யாரையும் கவ்வி பிடிக்கவில்லை. உடலை, பிரேத பரிசோதனைக்காக நாமக்கல் அரசு மருத்துவ கல்லுாரி மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர்.

இதுகுறித்து வழக்குப்பதிவு செய்த நாமக்கல் போலீசார், அப்பகுதியில் உள்ள, 'சிசிடிவி' கேமராக்களில் பதிவான காட்சிகளை வைத்து விசாரித்து வருகின்றனர்.

கோவை மாவட்டத்தில்

# இரவு முழுவதும் பரவலாக மழை!

## குளங்கள், குட்டைகளுக்கு நீர் வரத்து அதிகரிப்பு!!

கோவை, அக்.22

கோவை மாவட்டத்தில் ஊரக வளர்ச்சி முகமை, பொதுப்பணித்துறை கட்டுப்பாட்டில்700 குளங்கள், கசிவு நீர் குட்டை தடுப்பணைகள் உள்ளது. பருவமழை தீவிரமாக பெய்து வரும் நிலையில் கோவை மாவட்டத்தில் நீர்த் தேக்கங்களில் நீர் வரத்து அதிகமாகிவருகிறது. குறிப்பாக ஊரக பகுதிகளில் வறண்டு கிடந்த நீர் தேக்கங்களில் நீர் நிரம்பி வருகிறது.

மாவட்ட அளவில் சுமார் 250 க்கும் மேற்பட்ட நீர் தேக்கங்களில் நீர் மட்ட அளவை எட்டும் நிலையில் உள்ளது, தொண்டாமுத்தூர், கிணத்துக்கடவு, பொள்ளாச்சி, பெரியநாயக்கன்பாளையம்,மேட்டுப்பாளையம்வட்டாரங்களில்நீர்தேக்ககுளங்கள்,குட்டைகளுக்கு நீர் வரத்து அதிகமாகி வருகிறது, வனப்பகுதியில் உள்ள தடுப்பணைகள், நீர் குட்டைகளும் அதிகளவில் நிரம்பி வருகிறது குறிப்பாக வன விலங்குகளின் நீர் தேவைக்காக வனத்துறை சார்பில் வனப்பகுதியில் அமைக்கப்பட்ட 400 க்கும் மேற்பட்ட குட்டைகளின் நீர் மட்டம் உயர்ந்து வருகிறது. தடுப்பணைகளும் நிரம்பும் நிலையிருக்கிறது தொடர்ந்து மழை பெய்துவருவதால் குளங்களுக்கு நீர் திறக்கப்பட்டு தேவையான அளவு தண்ணீர் சப்ளையாகிறது குளங்கள் தொடர் இணைப்பில் இருப்பதால் தொடர்ந்து நீர் பாய்கிறது. மழைநீர் வரத்து காரணமாக நொய்யல் ஆற்றில் வெள்ளம் நீர் வந்துகொண்டிருக்கிறது, வெள்ளம் காரணமாக பொது மக்கள் குளம், குட்டைகளில் இறங்கி குளிக்ககூடாது சேருசகதி மற்றும் நீர் வரத்து அதிகமாக இருப்பதாக பொதுப்பணித்துறையின் நீர் வள ஆதார அமைப்பினர் எச்சரித்துள்ளனர்.



வேப்பனஹள்ளி தொகுதியில்

# ரூ.5 லட்சம் மதிப்பில் பொது மேடை கட்ட பூமிபூஜை!

## முனுசாமி எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!!

கிருஷ்ணகிரி,அக்.22

வேப்பனஹள்ளி சட்ட மன்ற தொகுதி உட்பட்ட சூளகிரி வட்டம் செட்டிப் பள்ளி ஊராட்சி அலசப் பள்ளி கிராமத்தில் தெற்கு ஒன்றிய செயலாளர் பாபு (எ) வெங்கடாசலம் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சட்ட மன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து, அதிமுக துணை பொதுச்செயலாளரும், வேப்பனப்பள்ளி சட்டமன்ற உறுப்பினருமான கே.பி. முனுசாமி ரூ.5,00,000 மதிப்பீட்டில் பொது மேடை கட்ட பூமி பூஜையை செய்து பணியினை தொடங்கி வைத்தார். பிறகு அதிமுகவின் 54 வது தொடக்க விழாவை முன்னிட்டு பொது மக்களுக்கு இனிப்புகள், அன்னதானம் வழங்கினார்.

நிகழ்ச்சியில்கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம் பொருளாளர் மால்லையா, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், நிர்வாகிகள், முன்னால் தலைவர்கள், முன்னால் ஒன்றிய குழு உறுப்பினர், கிளை செயலாளர்கள், கழக தொண்டர்கள், ஊர் பொது மக்கள் கலந்து கொண்டனர்.



கிருஷ்ணகிரியில் காவலர் தினத்தை முன்னிட்டு

# இறந்த காவலர்களுக்கு நினைவு பரிசு!

## கலெக்டர், காவல் கண்காணிப்பாளர் ஆகியோர் வழங்கினர்!!

கிருஷ்ணகிரி அக்.22

கிருஷ்ணகிரியில் மாவட்ட ஆட்சித் தலைவர் ச.தினேஷ்குமார். மாவட்ட காவல் கண்காணிப்பாளர்பெ.தங்கதுரை கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள் நமச்சிவாயம், சங்கர் ஆகியோர் காவலர்நினைவுதினத்தை முன்னிட்டு மரியாதை செய்தனர்.

இந்த ஆண்டு நாடு முழுவதும் இறந்த 191 நபர்களுக்கும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலக வளாகத்தில் உள்ள காவலர் நினைவு தூண் அருகில் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்கள், கிருஷ்ணகிரி, பர்கூர் தேன்கனிக் கோட்டை ஊத்தங்கரை மாவட்ட துணை காவல் கண்காணிப்பாளர்கள் காவல் ஆய்வாளர்கள் உதவி ஆய்வாளர்கள், ஓய்வு பெற்ற காவல்துறை அலுவலர்கள், முன்னாள் ராணுவத்தினர், ஊர் காவல் படை வீரர்கள் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினர்,

காவல்துறையினரின் அணிவகுப்பு மரியாதையுடன் குண்டுகள் முழங்க வீரவணக்கம் செலுத்தினார்கள், தொடர்ந்து கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பணியியன் போது இறந்த ஐந்து காவல்துறையினரின் குடும்பத்தினருக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் , மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆகியோர் நினைவு பரிசினை வழங்கி சிறப்பித்தனர்.

கந்தசஷ்டி விழாவையொட்டி

# கோவை - திண்டுக்கல் சிறப்பு ரெயிலை நீட்டிக்க வலியுறுத்தல்!

கோவை,அக்.22

கோவைதிண்டுக்கல் இடையேயான முன்பதிவில்லாசிறப்புமெமுரெயிலை கந்தசஷ்டி விழாவுக்கு பழனிசெல்பவர்களுக்கு வசதியாகலவரும் 28ந் தேதி வரை நீட்டித்து இயக்கவேண்டும் எனு வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்தமெமுரெயில்போத்தனூர்,யெிகிணத்துக்கடவு,பொள்ளாச்சிக,உடுமலைப்பேட்டை,பழனி,ஒட்டன்சத்திரம் ருஆகிய ரெயில் நிலைய ங்களில்நின்று செல்லும்எனரெயில்வே நிர்வாக ம்சார்பில்தெரிவிக்கப்பட்டுள்ளது.இந்த நிலையில் நாளைமுதல் 28ந் தேதி வரை கந்த சஷ்டி விழா நடைபெற உள்ள நிலையில்கோவை – திண்டு க்கல்இடையேயானமுன்பதிவில்லாமெமுரெயிலை



வரும்28ந் தேதி வரைநீட்டித்து இயக்கினால்கோவை ,பொள்ளாச்சி உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்தமக்கள் பழனி செல்ல வசதியாக இருக்கும் என ரெயில் பயணிகள் சங்கத்தினர்கோரிக்கை விடுத்துள்ளனர்

# அத்தனூர் மாரியம்மன் கோவில் திருவிழா!

## உடம்பில் களிமண் சேறு பூசி பக்தர்கள் வழிபாடு!!

ஈரோடு,அக்.22–

ஈரோடு மாவட்டம் புஞ்சை புளியம்பட்டி அருகே குட்டகம் கிராமத்தில் எழுந்தருளி அருளாட்சி செய்தவரும் பழமை வாய்ந்த ஸ்ரீ அத்தனூர் அம்மன் மற்றும் ஸ்ரீ மாரியம்மன் திருக்கோவில்கள் அமைந்துள்ளது.

இக்கோவில்களில் ஆண்டுதோறும் புரட்டாசி மாதம் அம்மனிடம் பூ வரம் கேட்டுபொறிமாற்றி சேத்தாண்டி வேஷம் அணிந்து அங்கப்பிரதட்சனை செய்து அம்மனுக்கு நேர்த்திக்கடன் செலுத்தும் வினோத வழிபாடு செய்தனர்.

பின்னர் சுற்று வட்டாரத்தில் உள்ள எட்டு உரை சேர்ந்த மக்கள் பொங்கல் வைத்து கம்பு, ராகி, பச்சரிசி, புளியம் பருப்பினால். மாவிளக்கு எடுத்து வரப்பட்டு சிறப்பு அலங்காரத்தில் அருள் பாலிக்கும் ஸ்ரீ



திருவிழா மிக விமர்சையாக நடைபெறும்.

அதன்படி இந்த ஆண்டு திருவிழா பூ வரம் கேட்டு விழா தொடங்கி குதிரையில் லட்சுமி அழைத்தல் நிகழ்ச்சியுடன் தொடங்கி அத்தனூர் அம்மன் கோவில் முன்பு எருமை கிடாய்க்கு சிறப்பு பூஜைகள் செய்யப்பட்ட பின்னர் எருமை கிடாய் பலி யீட்டு வழிபாடு செய்தனர்.

இதை அடுத்து ஸ்ரீ மாரியம்மன் கோவிலில் கம்பம் நடப்பட்டு தொடர்ந்து ஏழு நாட்கள் பல்வேறு பூஜைகள் செய்து கம்பத்தாட்டம் நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து திருவிழாவின் முக்கிய நிகழ்ச்சியான நேற்று திங்களன்று ஆண்கள், பெண்கள், சிறியவர்கள், என அனைத்து பக்தர்களும் உடம்பில் களிமண் சேறு பூசி, கொண்டு செடிகளை கட்டிக்கொண்டு அத்தனூர் அம்மன், மற்றும் ஸ்ரீ , மாரியம்மனுக்கு சிறப்பு பூஜைகள் செய்து தீபாராதனை காட்டப்பட்டது இதைக்கண்டு ஏராளமான பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்தனர் பின்னர் இரவு கம்பம் பிடுங்குதல் நிகழ்ச்சியுடன் திருவிழா நிறைவடைந்தது.

மேலும் விழாவில் சிவன் பார்வதி காளி போன்ற வேஷம் அணிந்து கொண்டு பக்தர்கள் நடனம் ஆடினர், முன்னோர்களாக நினைத்து வழிபடும்அம்மனுக்குஉடம்பில் சேரு பூசிக்கொண்டு சேர்த்தாண்டி வேஷம் அணிந்து வழிபாடு செய்தால், குடும்பம் செழித்து மழை பொழிந்து விவசாயம் கால்நடைகள் , செழித்து ஊர் மக்கள் நோய் நொடி இன்றி இருப்பார்கள் என்பது காலம் தொட்டு நடைபெற்ற வருவதாக கூறுகின்றனர்.